# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2387/22 – 2024 ජූනි මස 05 වැනි බදාදා – 2024.06.05

***2387/22 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.- 4/1981* (II)

***1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்***

***பிரிவு 24 இ மற்றும் 24ஈ என்பவற்றின் கீழான கட்டளை***

அரசியலமைப்பின் 44(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்துவாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 24இ மற்றும் பிரிவு 24ஈ என்பவற்றின்மூலம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இக்கட்டளை மூலம் -

(அ) இதற்கான அட்டவணை I இன் தரப்பட்டுள்ள அடையாளக் குறிகள் மற்றும் எல்லைகளைக் கொண்டுள்ளதான காணி இடப்பரப்பு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சூழல் பாதுகாப்பு இடப்பரப்பொன்றாகவிருத்தல் வேண்டுமென்றும், (இதனகத்துப்பின்னர் “பாதுகாப்பு இடப்பரப்பு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “வர்ணகலவத்த சூழல் பாதுகாப்பு இடப்பரப்பு ” என அழைக்கப்படுதல் வேண்டுமெனவும் ;

(ஆ) இக்கட்டளை வலுவிலுள்ள காலம் வரை -

(i) சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவுள்ள பாதுகாப்பு இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் திட்டமிடுதற் திட்டம் அல்லது கருத்திட்டம் இக்கட்டளை நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து பாதுகாப்பு இடப்பரப்பினுள் தொழிற்படாதிருத்தல் வேண்டுமெனவும்;


1A – PG 6745 – 504 (2024/06)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ii) அதிகாரசபை தவிர்ந்த ஆளெவரும் பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிதலாகாதெனவும்;

ஆயின், அதிகாரசபை அரசாங்கத் திணைக்களத்துக்கு, கூட்டுத்தாபனத்துக்கு, நியதிச்சட்ட சபைக்கு உள்ளூரதிகார சபைக்கு அல்லது 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பகிரங்க அலுவலருக்கு பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அதனது எவையேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றைக் கையளிக்குமிடத்து, அத்தகைய அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை, உள்ளூரதிகார சபை அல்லது பகிரங்க சபை சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் மற்றும் புரியலாம் அத்துடன்

(iii) பாதுகாப்பு இடப்பரப்பினுள் பௌதீக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில், அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் இதற்கான II ஆம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை II இன் பாகம் II இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய பிரயோகிக்கப்படுதல் வேண்டுமெனவும், நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் புரிதல் வேண்டுமெனவும்,

இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இக் கட்டளையில், -

"சட்டம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம் எனப் பொருள்படும்; அத்துடன்

"அதிகார சபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை எனப் பொருள்படும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2024, யூன் 05.

**அட்டவணை I**

**பாதுகாப்பு இடப்பரப்பின் அடையாளக் குறிகளும் எல்லைகளும்**

1. பாதுகாப்பு இடப்பரப்பின் விஸ்தீரணம் 502.69 ஹெக்டேயர்களாகும்.

2. பாதுகாப்பு இடப்பரப்பு சப்பிரகமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தின், குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவின், அடவிகந்த கிராம அலுவலர் பிரிவினும் கேகாலை மாவட்டத்தின் தெரணியகல பிரதேச செயலாளர் பிரிவின் மாகல கிராம அலுவலர் பிரிவிலும் அமைந்துள்ளது.

3. பாதுகாப்பு இடப்பரப்பின் குறிகளும் எல்லைகளும் பின்வருமாறு:-

வடக்கு - சமனல இயற்கை வன ஒதுக்கத்தின் எல்லை.

கிழக்கு - சமனல இயற்கை வன ஒதுக்கத்தின் எல்லை.

தெற்கு - சமனல இயற்கை வன ஒதுக்கத்தின் எல்லை மற்றும் சமனல இயற்கை வன ஒதுக்கத்தின் எல்லை சந்திக்கும் இடம் வரைக்கும் அதிலிருந்து அடவிகந்த கிராம அலுவலர் பிரிவின் எல்லை வழியாக புவியிடங்காட்டியின் (GPS) ஆள்கூற்று கி. 162599.9 வ 179278.2 ஆம் இலக்க இடம் வரை.

மேற்கு - புவியிடங்காட்டியில் (GPS) ஆள்கூற்றுகள் கி. 162599.9, வ. 179278.2 இலிருந்து புவியிடங்காட்டியில் (GPS) ஆள்கூற்றுகள் கி. 162468.9, வ. 179291.3, கி. 162554.3, வ. 179382.7, கி. 162670.7, வ. 179444.8, கி. 162723.6, வ. 179438.2, கி. 162603.3, வ. 179514.9, கி. 162560.9, வ. 179517.6, கி. 162531.8, வ. 179495.1, கி. 162431.3, வ.179426.3, கி. 162350.9, வ. 179466.4, கி. 162369.7, வ. 179552.6, கி. 162425.1, வ.179586.2, கி. 162413.4, வ. 179675.0, கி.162399.7, வ. 179836.7, கி. 162412.3, வ. 179943.9, கி. 162366.0, வ.180018.6, கி. 162394.2, வ. 180131.9, கி. 162425.9, வ. 180191.2, கி. 162383.6, வ. 180296.8, கி. 162330.3, வ. 180350.4, கி. 162293.0, வ. 180412.3, கி. 162198.8, வ. 180403.3, கி. 162075.7, வ. 180446.9, கி. 161980.6, வ. 180508.8, கி. 161978.0, வ. 180586.4, கி. 162046.3, வ. 180648.3, கி. 162152.6, வ. 180612.6, கி. 162173.3, வ. 180716.5, கி. 162280.8, வ. 180725.9, கி. 162335.5, வ. 180611.6, கி. 162345.1, வ. 180428.2, கி. 162436.3, வ. 180494.9, கி. 162411.7, வ. 180588.6, கி. 162421.3, வ. 180643.3, கி. 162394.6, வ. 180747.3, கி. 162452.9, வ. 180832.9, கி. 162460.5, வ. 180921.2, கி. 162585.4, வ. 181036.5, கி. 162699.7, வ. 181120.6, கி. 162902.1, வ. 181149.0, கி. 163090.3, வ. 181192.9, கி. 163224.0, வ. 181279.0, கி. 163159.4, வ. 181408.0, கி. 163090.0, வ. 181537.0, கி. 163080.5, வ. 181627.1, கி. 162924.9, வ. 181719.2, கி. 162775.7, வ. 181762.0, கி. 162685.3, வ. 181828.3, கி. 162559.6, வ. 181923.7, கி. 162369.1, வ. 181945.2, கி. 162251.2, வ. 182047.4, கி. 161022.2, வ. 181881.4, கி. 162081.1, வ. 182007.1, கி. 161957.6, வ. 181991.6, கி. 161799.3, வ. 181902.0, கி. 161591.9, வ. 181927.4, கி. 161410.3, வ. 181854.0, கி. 161213.0, வ. 181868.2, கி. 161119.6, வ. 181789.3, கி. 161084.7, வ. 181859.2, கி. 161044.4, வ. 182006.3, கி. 160855.0, வ. 181940.7, கி. 160717.4, வ. 181940.7, கி. 160645.4, வ. 182074.0, கி. 160788.9, வ. 182145.3, கி. 160926.1, வ. 182324.6 ஆம் இலக்க இடங்கள் என்பவற்றுடன் புவியிடங்காட்டியில் (GPS) ஆள்கூற்றுகள் கி. 161101.0, வ. 182472.5 வரையான இடங்கள்


4. உரிமமளிக்கப்பட்ட நில அளவையாளர் திரு சந்திரசிறி ஜீ. புஞ்சிஹேவாவினால் 2007.04.06 ஆம் திகதியிலிருந்து 08 ஆம் திகதிவரை நில அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 1144 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தின் காணித்துண்டு 01 என காட்டப்பட்டுள்ள 4.2577 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள -

வடக்கு - 393 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தின் காணித்துண்டு 361 2/3 இன் ஒரு பகுதியும் ;

கிழக்கு - 393 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தின் காணித்துண்டு 361 2/3 இன் ஒரு பகுதியும் ;

தெற்கு - களுகங்கை (குறுகங்கையும்);

மேற்கு - 393 ஆம் இலக்க இறுதி கிராம வரைபடத்தின் துண்டு இலக்க 357 மற்றும் 361 2/3 இன் ஒரு பகுதியும் என்றவாறு எல்லைகளால் சூழப்பட்டுள்ள காணி இடப்பரப்பு பாதுகாப்பு இடப்பரப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது ;




| Lot | Containing in Extent | | | | North | East | South | West | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | A | R | P | Hectare | | | | | |
| 1 | 10 | 2 | 03.00 | 4.2577 | Part of Lot 361 2/3 in F.V.P. 393 | Part of Lot 361 2/3 in F.V.P. 393 | Kalu Ganga | Lot 357 - & Part of Lot 361 2/3 in F.V.P. 393 | Part of Lot 361 2/3 in F.V.P. 393 |
| | 10 | 2 | 03.00 | 4.2577 | | | | | |

| Lot | A. R. P. | Hectares |
|---|---|---|
| 1 | 10 2 03.00 | 4.2577 |

Surveyed on 2007/04/6-8


Boundaries Pointed Out By} Mr. K.P.B.M. Pathirana
Boundaries Pointed Out To} Derector L.R.C. Ratnapura

Drawn By Computer FB No. 48/54

Copy

Chendrasiri G. Punchihewa
Licensed Surveyor Leveller and
Court Commissioner

5. பாதுகாப்பு இடப்பரப்பின் வரைபடம்



## அட்டவணை II

### பாகம் I

### பாதுகாப்பு இடப்பரப்பினுள் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள்

பௌதீக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பன பின்வரும் நடவடிக்கைகளுக்கு மட்டுமே இருத்தல் வேண்டும்

1. தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டங்களின் பராமரிப்பு (இரண்டு சமய தலங்கள், இரண்டு அம்பலங்கள், எரந்த - சிவனோளிபாதமலை வீதி மற்றும் யாத்திரிகர்களுக்கு வசதிகள் அளிக்கும் நிலையங்கள்)

2. தற்போதுள்ள சிறிய அளவிலான நீர் மின்சக்தி உற்பத்தி கருத்திட்டத்தின் தொழிற்பாடும் பராமரிப்பும்.

3. விசேட ஆக்கிரமிப்பு பூர்வீகமற்ற நடவடிக்கைகள்

4. கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள்

5. தொல்லியல் இடங்களின் அகழ்வுகள், பேணல் மற்றும் பராமரிப்பு

6. சப்பிரகமுவ மாகாண சபையினால் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு, சுற்றுலாத்துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் முன்மொழியப்பட்ட வாகனத் தரிப்பிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்.

7. எரந்த தொடக்கம் வர்ணகல சிறிய அளவிலான நீர் மின்சக்தி உற்பத்தி கருத்திட்டம் வரையான தற்போதுள்ள வீதியின் பராமரிப்பு செயற்பாடுகள்.

8. பாதுகாப்பு இடப்பரப்பின் நிலைபெறுதகு தன்மையுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள்.

### பாகம் II

### பாதுகாப்பு இடப்பரப்பினுள் இவ் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஏற்புடைமையாகக்கூடிய நிபந்தனைகள்

1. இவ் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள ஏதேனும் பௌதீக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பன பின்வரும் நிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி எனபன சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிறைவற்றப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய கல்வி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளின் பெறுபேறுகள் கற்கை அல்லது ஆராய்ச்சி அறிக்கையின் பிரதியுடன் சேர்த்து அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) அத்தகைய பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி என்பன பின்வருமாறு அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் ;

(i) பாதுகாப்பு இடப்பரப்பின் நிலைபெறுதகு தன்மைக்கு தடங்கல் ஏற்படுத்தலாகாது ; அத்துடன்

(ii) விலங்கு மற்றும் தாவர வாழிடங்களுக்கு இடையூறு ஏற்படுத்தலாகாது.

(ஈ) ஆக்கிரமிப்பு பூர்வீகமற்ற இனங்களை பாதுகாப்பு இடப்பரப்புக்கு அறிமுகப்படுத்துதல் ஆகாது ;

(உ) பாதுகாப்பு இடப்பரப்பினுள் ஏதேனும் வகையிலான கழிவுகளை அல்லது கழிவுநீரை வெளியேற்றுதல் ஆகாது.

(ஊ) பாதுகாப்பு இடப்பரப்பினுள் காணி மீட்டல், நிலச் சீரழிவு மற்றும் மண்ணரிப்புக்கு இயைபான செயற்பாடுகளை பொறுப்பு முயற்சியெடுத்தல் ஆகாது; அத்துடன்

(எ) ஏலவேயுள்ள சிறிய அளவிலான மின் உற்பத்தி கருத்திட்டத்திலிருந்து கீழ் நோக்கியதாக குறு கங்கையில் போதியளவு நீர் பாய்ந்தோடுவதை பேணுதல் வேண்டும்.

2. இருபத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பாதுகாப்பு இடப்பரப்பினுள் பௌதிகத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியை ஏதேனும் அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை, உள்ளூரதிகார சபை அல்லது பகிரங்க அலுவலர் நிறைவேற்றுகின்றவிடத்து, அதிகார சபை அத்தகைய பௌதிக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் கருத்திட்ட பிரேரணைகளை செய்முறைப்படுத்தி மதிப்பீடுசெய்வதற்கென நிருவாக அறவீட்டுத் திட்டமொன்றை தயாரித்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய செயற்பாடுகளை கண்காணித்தலும் வேண்டும்.

3. அதிகார சபை சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (ஓ) எனும் பந்திக்கமைய, பாதுகாப்பு இடப்பரப்பினுள் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரசபைக்கு உதவுவதற்கு வர்ணகலவத்த சூழல் பாதுகாப்பு இடப்பரப்பு முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புக் குழு என அறியப்படும் குழுவொன்றை நியமிக்கலாம்.

4. அத்தகைய குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் : -

(அ) அத்தகைய குழுவின் தவிசாளராக குருவிட்ட பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் ;

(ஆ) அத்தகைய குழுவின் செயலாளராக பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ;

(இ) தெரணியகல பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ;

(ஈ) குருவிட்ட பிரதேச சபையின் செயலாளர் ;

(உ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அலுவலரொருவர் ;

(ஊ) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் காடு பேணுநர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அலுவலரொருவர்;

(எ) தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தொல்பொருள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அலுவலரொருவர் ;

(ஏ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அலுவலரொருவர் ;

(ஐ) காணி பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் காணி பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அலுவலரொருவர் ; அத்துடன்

(ஒ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு அவசியமாகவிருக்கக்கூடியவாறான ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் எனும் தரத்துக்கு குறையாத அத்தகைய வேறு அலுவலர்கள்.

EOG 06-0041